# LAABH SAMACHAR

Volume: 15 | Issue : 01 | APRIL 2026 | Tamil & English Monthly | Price: Rs. 10/-
official Publication SOURASHTRA CHAMBER OF COMMERCE




அவோ! மிளோ!! ஹொடோ!!!

## SITCON
SOURASHTRA INDUSTRIAL TRADE CONFERENCE 2026

| EXHIBITION | CONFERENCE | MADURAI RUN |
|---|---|---|
| AUGUST 07 \| 08 \| 09 2026 | AUGUST 15 \| 16 2026 | AUGUST 09 2026 |
| Arunachalam Kamalambal Hall A/C | Tamilnadu Chamber of Commerce Hatsun Hall A/C | Madurai Gandhi Museum Ground |



அனைத்து வகையான காலணிகள்
மொத்த விற்பனையாளர்கள்

METRO

# மெட்ரோ ஷீ மார்ட்

16, அமெரிக்கன் மிஷன் சர்ச் தெரு,
(பெரியார் பஸ் ஸ்டாண்ட் அருகில்)
மதுரை - 625 001.

PH : 23322364, 2331297, 4382343



# JaiGenga Uniforms जेयगंगा यूनिफाम

133-A, East Masi Street, 4 Feet Lane, Madurai - 625 001.
Email : jaigenga@gmail.com | Website : www.jaigenga.com
89035 34438, 887059 4105 ESTD : 1968

Mfrs. Hospital Dress Material & Uniform, School & College Lab Coats, Aprons Industrial Uniform, Hotel Industry Uniform, Pharmaceuticals Drugs Mfrs. Dress Wears




## வாடகை / ஒத்திக்கு

133-கீழமாசி வீதி, மதுரை-1. போலீஸ் ஸ்டேஷன் அருகில்
தரை தளம் ( ஜெய்கெங்கா வாணிபம்)



1 வது மாடி, 2வது மாடி 1000 ச.அடி
மாத வாடகை Rs.25000/- ஒத்திக்கு Rs.2000000

ஜெய்கெங்கா நிறுவன ஸ்தாபகர் பிதாமகர்
K.N.K.ராமஜெயம் 8903534438 jaigenga@gmail.com

*Ananda Nilayam*

# Mayflower

*The Banquet Hall A/C*

Location - Google Map

| | | |
|---|---|---|
| Marriage Function | Betrothal | Naming Ceremony |
| Birthday Party | Puberty | Get-to-gether |

*Hall available for all type of functions*

Address: 161F, Salaipillaiyar Koil Street, Kamarajar Salai, Madurai - 625001

**For Bookings - Contact: 94439 30728 / 86100 06493 / 92442 31583**

# தலைவர் அறிக்கை

## அஸ்கிதெங்கோ மொன்னு பொறெ
## நமஸ்கார்...

K.K. தினேஷ், தலைவர்

அனைவருக்கும் இனிய தமிழ்ப்புத்தாண்டு நல் வாழ்த்துகள். இந்த இனிய ஸ்ரீபராபவ வருடத்தில் நாம் துவக்கும் அனைத்து ஆக்கப்பூர்வமான செயல்களும் என்றென்றும் ஓங்கி வளர தமிழன்னை ஆசி புரிவாராக.

இந்த சித்திரைத் திருநாளில், நம் தலையெழுத்தை நாமே நிர்ணயிக்கும் மாபெரும் சக்தியாக இருக்கும் வாக்குரிமையை செலுத்தும் தருணம்.

23.04.2026 அன்று நடைபெறும் சட்டமன்ற தேர்தலில், தங்களின் பொன்னான வாக்குகளை தவறாமல் செலுத்தி, ஜனநாயக கடமையை நிலைநாட்டக் கேட்டுக்கொள்கிறேன்.

அரசன் எவ்வழியோ.. குடிமக்கள் அவ்வழி என்பார்கள். நம் குழந்தைகள், தொழில், சுற்றுச்சூழல், பொருளாதாரம் மற்றும் சமூக பாதுகாப்பை உறுதி செய்யும் சரியான தலைவனை அடையாளம் கண்டு வாக்களியுங்கள். உங்களின் வாக்கு, சரியான தேர்வாக இருக்கும் என்று நம்புகிறேன்.

நமது சேம்பர்-ன் சிட்கான் 2026 தொழில் வர்த்தக மாநாட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மாநாட்டுச் சேர்மன் திரு. கே.கே. குபேந்திரன் அவர்கள் தலைமையில், குழு உருவாக்கம் மற்றும் உறுப்பினர்கள் தேர்வு நடைபெற்று வருகின்றன. மே மாதம் முதல் வாரத்தில் பிரவுச்சர் வெளியீடு செய்வதற்கான பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அர்ப்பணிப்பு உணர்வுடன், குழு ஒருங்கிணைப்பாளர்கள் பணி புரிந்து, சேம்பர்-ன் ஆக்கப்பூர்வமான முன்னேற்றத்திற்கு வழிவகுப்பார்கள் என்பது நிச்சயம். அங்கத்தினர்கள் அனைவரும் தங்களின் ஏகோபித்த ஆதரவைத் தந்து மாநாடு வெற்றி பெற செய்வீர்கள் என்று நம்புகிறோம்.

அமெரிக்க-ஈரான் போர் அபாயம் தற்காலிகமாக குறைந்தாலும். முழுமையான தீர்வு இல்லாத இந்த சூழலில், நமது மத்திய அரசாங்கம், நம் நாட்டு மக்களை காக்கும் பொருட்டு எடுத்து வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் பாராட்டுக்குரியது. பிற நாடுகளைப்போல, பெட்ரோல் டீசல் விலை உயர்த்தாமல், கட்டுப்பாட்டில் வைத்திருப்பது, வீட்டு உபயோக கேஸ் சிலிண்டர் தடையின்றி கிடைக்கச் செய்வது, வணிக கேஸ் சிலிண்டர்கள் கிடைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்வது, வணிகர்கள் பெற்ற கடனை கால நீட்டிப்பு செய்யும் முயற்சி, மேற்கொண்டு கூடுதல் தொழில் கடன் வழங்குவதற்கான புதிய திட்டங்கள் வகுத்தல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளை செய்ய தயாராக உள்ளதை வரவேற்கிறோம்.

நன்றி.


SOURASHTRA CHAMBER OF COMMERCE

## BOARD OF MEMBERS
## YEAR 2024-2026

| Office Bearers | Designation | Contact |
|---|---|---|
| K.K. Dinesh | President | 98421 16461 |
| T.R. Mohanram | Imm. Past President | 93441 01432 |
| K.K. Kubendran | Vice President | 93441 25647 |
| A.B. Kumaresh Babu | General Secretary | 93443 04980 |
| V.V. Ramlakshmanji | Treasurer | 94439 30728 |
| S.G. Srinivasan | Joint Secretary | 91500 99456 |
| T.N. Suriyaprakash | Joint Secretary | 93441 52068 |
| V.G. Ramdoss | External Aff. / EC Member | 93441 00360 |
| J.S. Sayee Jeevan | EC Member | 90809 51577 |
| A.R. Ganesan | EC Member | 98421 75804 |
| B.S. Janaarthanan | EC Member | 97905 75650 |
| T.K. Sivanath Babu | EC Member | 94423 27081 |
| S.M. Karthi Kumaran | EC Member | 94438 31496 |
| S.K.B. Chandraprakash | EC Member | 98655 45048 |
| N.S. Prem Kumar | EC Member | 99944 35350 |
| K.K. Dinakaran | EC Member | 98409 60833 |
| K.V. Kumaresan | EC Member | 98940 51735 |
| S.S. Ramsundar | EC Member | 93441 22181 |
| E.R.K. Vignesh Babu | EC Member | 94422 44648 |
| T.M. Rubesh Babu | EC Member | 95000 35200 |
| S.S. Premkumar | EC Member | 96293 42295 |
| S.R. Sundarnath | EC Member | 92444 03917 |
| M.M. Dhanasekaran | EC Member | 98421 58085 |
| K.B. Sivaprakash Babu | EC Member | 94433 66251 |
| T.K. Yageshwaran | EC Member | 99524 22260 |

| Past Presidents cum EC Members | | Contact |
|---|---|---|
| K.V. Bala, Senior President | - Yr. 2007-2009 | 044 2833 0867 |
| C.K. Sekar | Yr. 2009-2011 | 97900 77111 |
| E.R. Kumaresan | Yr. 2011-2013 | 93674 66777 |
| K.K.G. Prabhakaran | Yr. 2013-2015 | 98409 60845 |
| S.K.R. Ramesh | Yr. 2015-2017 | 96552 34409 |
| M.K. Kaladhar Babu | Yr. 2017-2019 | 99944 84443 |
| Kumaran B. Jaghuva | Yr. 2019-2022 | 99949 26348 |
| **Advisors** | | |
| K.K. Surendranath | | 98409 88810 |
| T.K.D. Mohan | | 98430 52530 |

| Patron Members | |
|---|---|
| K.K. Surendranath | M/s. Varuni Chemicals |
| K.S. Ravindranath | M/s. Indowind Energy Ltd., Chennai |
| M.K. Jawahar Babu | M/s. Jawahar Babu |
| K.R.M. Niranjan Kumar | M/s. India Ultra Sound, Calicut |
| E.R. Kumaresan | M/s. V.P.C. Textiles |
| M.R. Krishnamoorthy | M/s. PT. Kewalram, Indonesia |
| T.S. Sivaprakash | M/s. Shree Sivabalaji Steels (P) Ltd., |
| (Late) K.B. Mohan | M/s. K.B. Mohan, Engineering |
| T.L. Dukaram | M/s. Anezlina Cosmos |
| T.L. Sabari Babu | M/s. Sowbhaagyaas Gold & Diamond |
| B.V. Ramesh | M/s. Karpagam Motors |
| T.E. Yogesh | M/s. The Constructive Company |
| L.G. Padmanabhan Iyer | M/s. Karishma Electro Platers, Mumbai |

| Editorial Board | Designation | Contact |
|---|---|---|
| K.K. Gnana Prabhakaran | Publisher | 98409 60845 |
| E.R.K. Vignesh Babu | Chairman | 94422 44648 |
| K.S. Sivakumar | Member | 93441 51331 |
| Bhaskar Laguduva | Member | 82178 93697 |
| K.K. Shankar | Member | 97881 62559 |
| K.K. Ramkumar | Member | 98421 40007 |



## பொதுச்செயலாளர் அறிக்கை

*அங்கத்தினர்களுக்கு வணக்கம்*

- A.B. குமரேஷ் பாபு

**23.03.2026** – சேம்பர் நிர்வாகிகள் மற்றும் முன்னாள் தலைவர்கள் இணைந்து ஆலோசனைக் கூட்டத்தில், சேம்பர் வளர்ச்சிக்கான சில முக்கிய முடிவுகள் கூட்டத்தில் எடுக்கப்பட்டன.

**06.04.2026** – மதுரையில் நடைபெற்ற ஜிஎஸ்டி குறைதீர் கூட்டத்திற்கு சேம்பர் சார்பாக ஜிஎஸ்டி சேர்மன் திரு. N.S. பிரேம் குமார் அவர்கள் கலந்து கொண்டு கோரிக்கை மனுவை சமர்ப்பித்தார்.

**06.04.2026** – சேம்பர் முதுநிலைத் தலைவர் திரு. K.V. பாலா அவர்களின் ஷஷ்டியப்த பூர்த்தி விழாவில் சேம்பர் நிர்வாகிகள் மற்றும் முன்னாள் தலைவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

**07.04.2026** – ஏப்ரல் மாத தொழில் வர்த்தக கூட்டம் மாலை 6.30 மணிக்கு சேம்பர் வளாகத்தில் நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக மேனேஜிங் பார்ட்னர். ஸ்ரீ விநாயகா ஸ்கிரீன் திரு. L. ராமநாதன் அவர்கள் கலந்து கொண்டு பேசினார். சேம்பர் தலைவர் திரு. A.B. தினேஷ் அவர்கள் கூட்டத்திற்கு தலைமைத் தாங்கினார்.



## இதழ்குழுத் தலைவர் அறிக்கை

*அங்கத்தினர்களுக்கு வணக்கம்*

- E.R.K. விக்னேஷ் பாபு

நமது சேம்பர் உறுப்பினர்கள் அனைவருக்கும் 2026-27 புதிய நிதியாண்டு மற்றும் தமிழ்ப்புத்தாண்டு நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த பராபவ ஆண்டு அனைவரின் தொழிலையும், வாழ்க்கைச் சூழலையும் உயர்த்தட்டும்.

கடந்த மார்ச் மாத லாப் ஸமாச்சார் இதழ் மதுரை சர்வதேச விமான நிலைய இயக்குநர் திரு. முத்துகுமார் அவர்களின் கரங்களால் வெளியீடு செய்யப்பட்டது. இந்த சந்திப்பில், சேம்பர் நிர்வாகிகள் மற்றும் இதழ் குழுவினர் கலந்து கொண்டு விமான நிலையம் சர்வ தேச அந்தஸ்து கிடைத்ததற்கு தங்களது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

தமிழ்நாட்டை ஆள்வதற்கு, அடுத்த ஐந்தாண்டுகளுக்கு யாரிடம் ஒப்படைக்கலாம் என்கிற மிகப்பெரிய பொறுப்பு நம் மக்களுக்கு மீண்டும் இந்த 2026ல் கிடைத்துள்ளது. தேர்தல் நேரத்தில் கிடைக்கும் வாக்களிப்பதற்கான உரிமை, தொடர்ந்து அடுத்த ஐந்தாண்டுகளுக்கு நமக்கான பிற உரிமைகளையும் பெற சிறந்த வேட்பாளரை தேர்வு செய்யும் தருணம் இது. ஆகவே பொறுப்புடன் வாக்களிப்போம். நன்றி.

## மத்திய அமைச்சருடன் சேம்பர் நிர்வாகிகள்



மத்திய வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு. **பியூஸ் கோயல்** அவர்களை நமது சேம்பர் நிர்வாகிகள் 12.04.2026 அன்று மதுரையில் நடைபெற்ற கூட்டத்தில் சந்தித்தனர். அமைச்சருடன், (இடமிருந்து வலம்) செயற்குழு உறுப்பினர் திரு. V.G. ராம்தாஸ், தலைவர் திரு. K.K. தினேஷ் மற்றும் பொதுச் செயலாளர் திரு. A.B. குமரேஷ் பாபு.

**ஆண்டு சந்தா உறுப்பினர்கள் 2026-27ம் ஆண்டிற்கான சந்தா தொகையை விரைவில் செலுத்தக் கேட்டுக்கொள்கிறோம்**

SCAN & PAY

## திருக்குறள்

**ஒருமை மகளிரே போலப் பெருமையும்
தன்னைத்தான் கொண்டொழுகின் உண்டு.**

**பொருள்:** (பெருமை என்பது பிறப்பினால் அடையக்கூடியது அல்லவென்பது மட்டுமின்றிப் பிறருடைய உதவியால் அடையக் கூடியதுமல்ல). பெண்களுடைய கற்பைப்போலவே பெருமை என்பதும், ஒருவன் தானே தன்னுடைய நல்லொழுக்கத்தைக் காத்து நடந்து கொண்டால்தான் உண்டாகும்.

அதிகாரம் 98 | பெருமை (குற்றமற்ற தன்னம்பிக்கை) | ஒழிபியல்

**Kindly send us your Subscription, Donations & Bulletin Advt. to our Bank Account**

Name : Sourashtra Chamber of Commerce
Bank : State Bank of India
Acct. No. : 30134805614
Branch : Madurai City
IFSC : SBIN0011544




*Best Compliments*

# BVK GROUP



**Bala V Kutti**
Founder & Chairman

## Indus Finance Ltd
## Indowind Energy Ltd
## EverOn Power Ltd
## BeKae Properties P Ltd
## BVK Foundation

4th Floor (NW), Kothan Building, 114, M G Road, Nungambakkam, Chennai - 6000 834.
No 603, Keshava -BKC, Mumbai - 400 051.

Chennai | Madurai | Aralvoimozhi | Nettur | Gadag | Mumbai

# ஸௌராஷ்ட்ர சேம்பர்-ன்

# ஏப்ரல் மாத தொழில் வர்த்தக கூட்டம்




நமது சேம்பர்-ன் ஏப்ரல் மாத தொழில் வர்த்தக கூட்டம், கடந்த 07.04.2026 அன்று மாலை 6 மணி சேம்பர் வளாகத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

தொழில் மற்றும் வாழ்வியல் மேம்பாடு குறித்த தலைப்பில் நடைபெற்ற இந்த கூட்டத்திற்கு சிறப்பு விருந்தினராக மேனேஜிங் பார்ட்னர். ஸ்ரீ விநாயகா ஸ்கிரீன் திரு. எல். ராமநாதன் அவர்கள் கலந்து கொண்டார். சேம்பர் தலைவர் திரு. கே.கே. தினேஷ் அவர்கள் தலைமைத் தாங்கினார். திரு. கோவிந்த் அவர்கள் சிறப்பு விருந்தினரை அறிமுகம் செய்தார்.



திரு. எல். ராமநாதன் அவர்கள், தனி நபர் எவ்வாறு தன்னை சமுதாயத்திலும், தொழிலிலும் அடையாளப்படுத்திக் கொள்வது, எவ்வாறு ஆளுமையை வளர்த்துக்கொள்வது என்பது பற்றிய நுணுக்கமான வழிமுறைகளைத் தெரிவித்தார், அனுபவங்களைப் பகிர்ந்தார்.



அவரது சிறப்பான உரைக்கு சேம்பர் சார்பாக பொன்னாடை அணிவித்தும், நினைவுப் பரிசு வழங்கியும் கௌரவிக்கப்பட்டார்.

நிறைவாக, சேம்பர் பொதுச் செயலாளர் திரு. ஏ.பி. குமரேஷ் பாபு அவர்கள் நன்றி நவில, கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.



ஏப்ரல் மாத கூட்டம் சிறப்பாக நடைபெற உதவிய செயற்குழு உறுப்பினர் திரு. E.R.K. விக்னேஷ் பாபு, திரு. M.R. முரளிதரன். திரு. M.G. விஜயக்குமார், திரு. S.M. சுரேஷ் கண்ணா, திரு. T.G. சூரஜ்லால் மற்றும் திரு. M.M. கோபிசன் ஆகியோரை நமது சேம்பர் நிர்வாகிகள் நினைவுப் பரிசு வழங்கி கௌரவித்தனர்.



கடந்த மார்ச் மாதம் நடைபெற்ற ஜிஎஸ்டி குறைதீர்க்கும் கூட்டத்திற்கு சேம்பர் சார்பாக ஜிஎஸ்டி சேர்மன் திரு. N.S. பிரேம் குமார், செயற்மு உறுப்பினர் திரு. T.K. யாகேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டு ஜிஎஸ்டி கூடுதல் இணை இயக்குநர் திரு. நீரவ் மாலிக், I.R.S., அவர்களிடம் கோரிக்கை மனுவை அளித்தனர்.



சிட்கான் 2026 மாநாடு குறித்த ஆலோசனைக்கூட்டம் கடந்த 12.04.2026 அன்று சேம்பர் வளாகத்தில் நடைபெற்றது. மாநாட்டின் சேர்மன் திரு. கே.கே. குபேந்திரன் அவர்கள் தலைமைத் தாங்கினார்.

ASTROLOGER, PALMIST, ACU PUNCTUREIST
OM SHANTI
Cell: 90805 54802, 99424 90217
Prof. Dr. M.V. SUBBURAMAN
M.A.(Hin)., M.A.(Phil)., M.A.(Astro)., M.A. (Yoga), M.Ed., M.Phil., M.D.(Acu.)., M.B.A., PGDELT, Ph.D.(Hin)

Academic Co-ordinator for Hindi, D.D.E., M.K. University (Retd. HOD of Hindi, The American College, Madurai).
MARRIAGE & RE-MARRIAGE MATCHING CENTRE
ACU Puncture Treatment : 11.00 A.M - 2.00 P.M
Astrology Consultancy 5.00 P.M - 9.00 P.M
4, Keelamathur Pallivasal Main Street, Near Alankar Theatre, Madurai - 625009.
email: subburamanastro@gmail.com

# இந்திய
# ஏற்றுமதியாளர்களுக்கு ஒரு நற்செய்தி!

கூரியர் மூலமான ஏற்றுமதிக்கு விதிக்கப்பட்டிருந்த ₹10 லட்சம் வரம்பு நீக்கப்படுகிறது என்று DGFT அதிரடி அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

**DGFT-இன் அதிரடி அறிவிப்பு:**

27/03/2026 தேதியிட்ட அறிவிப்பு எண் 67/2025-26-ன் படி, வெளிநாட்டு வர்த்தகக் கொள்கை (FTP 2023) திருத்தப்பட்டுள்ளது. இதன்படி, பதிவுசெய்யப்பட்ட கூரியர் சேவைகள் அல்லது வெளிநாட்டு அஞ்சல் நிலையங்கள் மூலம் ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களுக்கான ₹10 லட்சம் மதிப்புக் கட்டுப்பாடு நீக்கப்படுகிறது. இது ஏப்ரல் 1, 2026 முதல் நடைமுறைக்கு வருகிறது.

***இதனால் உங்கள் ஏற்றுமதித் தொழில் எவ்வாறு மேம்படும்:***

**தடையற்ற வளர்ச்சி:** அதிக மதிப்புள்ள சரக்குகளை இனி தடையின்றி அனுப்பலாம். ஆர்டர்களைப் பிரித்து அனுப்ப வேண்டிய அவசியமோ அல்லது செலவு மிகுந்த மாற்று வழிகளைத் தேட வேண்டிய தேவையோ இனி இல்லை.

**MSME மற்றும் இ-காமர்ஸ் வளர்ச்சி:** சர்வதேச சந்தையைக் குறிவைக்கும் சிறு ஏற்றுமதியாளர்கள் மற்றும் ஆன்லைன் விற்பனையாளர்களுக்கு, வேகமான மற்றும் மலிவான கூரியர் வசதியைப் பயன்படுத்த இது ஒரு சிறந்த வாய்ப்பாகும்.

**தொழில் புரிவதை எளிதாக்குதல்:** இது இணக்க நடைமுறைகளை எளிதாக்குகிறது, தளவாடச் செலவுகளைக் குறைக்கிறது மற்றும் பணப்புழக்கத்தை விரைவுபடுத்துகிறது. 2026 பட்ஜெட் வாக்குறுதிகளுக்கு ஏற்ப அமைந்துள்ள இந்த நடவடிக்கை, உலகளாவிய வர்த்தகத்தில் இந்தியாவின் போட்டித்தன்மையை மேலும் அதிகரிக்கும்!

▪

[To be Published in the Gazette of India Extraordinary Part-II, Section-3, Sub-Section (ii)]

Government of India
Ministry of Commerce & Industry
Department of Commerce
Directorate General of Foreign Trade

**Notification No. 67/2025-26**
**New Delhi, Dated: 27 March 2026**

**Subject: Amendment in Para 9.05 of FTP 2023 to remove per-consignment value limit for courier exports - regarding.**

S.O. (E) – In exercise of powers conferred by section 5 of the Foreign Trade (Development and Regulation) Act, 1992, read with paragraphs 1.02 and 2.01 of the Foreign Trade Policy, 2023, as amended from time to time, the Central Government hereby amends **Para 9.05 of Foreign Trade Policy (FTP) 2023 (Export through Courier Service/Post) as under** :

| Existing Text | Revised Text |
|---|---|
| Exports through a registered courier service/Foreign Post Office is permitted as per Notification(s) issued under Customs Act, 1962. However, exportability of such items shall be regulated in accordance with FTP/Export Policy in ITC(HS) as notified. **The value limit for exports through courier service shall be Rs. 10,00,000 per consignment.** | Exports through a registered courier service/Foreign Post Office is permitted as per Notification(s) issued under Customs Act, 1962. However, exportability of such items shall be regulated in accordance with FTP/Export Policy in ITC(HS) as notified. **There shall be no value limit prescribed per consignment for exports through courier service.** |

2. The given amendment shall come into effect from April 01, 2026.

**Effect of this Notification**: The value limit per consignment for exports through courier service shall stand withdrawn with effect from April 01, 2026.

(Lav Agarwal)
Director General of Foreign Trade &
Ex-officio Additional Secretary to the Government of India

(File No.01/89/180/07/AM-23/PC-9/E-3191866)

# Inverted Duty Structure
## (தலைகீழ் வரி அமைப்பு)

GST-ல் தலைகீழ் வரி அமைப்பு (Inverted Duty Structure) என்பது, ஒரு பொருளைத் தயாரிப்பதற்குத் தேவையான மூலப்பொருட்களின் (Inputs) மீதான வரி விகிதம், அந்த முடிக்கப்பட்ட பொருளின் (Finished Goods) விற்பனை வரி விகிதத்தை விட அதிகமாக இருக்கும் நிலையைக் குறிக்கிறது.

உற்பத்தியாளர் வாங்கும் பொருட்களுக்கு அதிக வரி செலுத்துகிறார், ஆனால் விற்கும் போது குறைவான வரியே வசூலிக்கிறார். இதனால் அவர் செலுத்திய கூடுதல் வரி (Input Tax Credit - ITC) அரசாங்கத்திடம் தேங்கிவிடும். வரிக் கடன் தேங்குவதால், தொழில் செய்பவர்களின் கையில் பணப்புழக்கம் (Working Capital) குறையும்.

இத்தகைய சூழ்நிலையில், பயன்படுத்தப்படாத கூடுதல் உள்ளீட்டு வரிக் கடனை (Unutilized ITC) ரீஃபண்டாகக் கேட்டுப் பெற நூறீவீ சட்டத்தில் வழிவகை உள்ளது.

சில குறிப்பிட்ட பொருட்கள் மற்றும் சேவைகளுக்கு (உதாரணமாக, கட்டுமான சேவைகள்) இந்த ரீஃபண்ட் வசதி கிடையாது.

உதாரணம்: ஒருவர் 18% வரி செலுத்தி துணிகளை (Fabric) வாங்கி, அதிலிருந்து 5% வரி கொண்ட ஆயத்த ஆடைகளை (Ready-made Garments) தயாரித்து விற்றால், அது 'இன்வெர்ட்டட் டூட்டி ஸ்ட்ரக்சர்' ஆகும்.

1. **ரீஃபண்ட் கணக்கீட்டு சூத்திரம்** (Rule 89(5)): அரசாங்கம் இதற்காக ஒரு குறிப்பிட்ட சூத்திரத்தை (Formula) வழங்கியுள்ளது: அதிகபட்ச ரீஃபண்ட் தொகை = [(Net ITC × Inverted Turnover) ஜி Adjusted Total Turnover] – [Tax Payable on Inverted Supply × (Net ITC ÷ ITC on Goods and Services)]

(குறிப்பு: 2022-ல் செய்யப்பட்ட மாற்றத்தின்படி, இப்போது உள்ளீட்டு சேவைகளுக்கும் (Services) விகிதாச்சார அடிப்படையில் வரி கழிவு அனுமதிக்கப்படுகிறது.)

2. **எளிமையான விளக்கம்**: நீங்கள் பொருட்கள் (Goods) மற்றும் சேவைகள் (Services) வாங்கியபோது செலுத்திய மொத்த வரி. **(Net ITC),** எந்தப் பொருட்களுக்கு வரி குறைவாக உள்ளதோ, அந்தப் பொருட்களின் மொத்த விற்பனை மதிப்பு **(Inverted Turnover).** உங்களது நிறுவனத்தின் மொத்த விற்பனை **(Adjusted Total Turnover).** அந்த குறைவான வரி கொண்ட பொருட்களை விற்கும்போது நீங்கள் அரசுக்குச் செலுத்த வேண்டிய வரி **(Tax Payable).**

3. **ரீஃபண்ட் கோரும் முறை** (Step-by-Step):

**படிவம் RFD-01**: GST போர்ட்டலில் (GST Portal) லாக்-இன் செய்து, Services > Refunds > Application for Refund பகுதிக்குச் செல்ல வேண்டும்.

**காரணத்தைத் தேர்வு செய்தல்:** 'Refund on account of ITC accumulated due to Inverted Duty Structure' என்ற ஆப்ஷனைத் தேர்ந்தெடுக்கவும்.

**விவரங்களைப் பதிவேற்றுதல்:** விற்பனை மற்றும் கொள்முதல் தொடர்பான றீமிழிமிளதுளஜமி 1A என்ற விவரப்பட்டியலைப் பதிவேற்ற வேண்டும்.

**சரிபார்த்தல்:** நீங்கள் சமர்ப்பித்த விவரங்களை வரி அதிகாரி சரிபார்த்து, எல்லாம் சரியாக இருந்தால் ரீஃபண்ட் தொகையை உங்கள் வங்கிக் கணக்கிற்கு அனுப்புவார்.

**முக்கிய குறிப்பு:** ரீஃபண்ட் கோருவதற்கு காலக்கெடு உண்டு. எந்த நிதி ஆண்டிற்கு ரீஃபண்ட் கோருகிறீர்களோ, அந்த ஆண்டின் இறுதிக்குப் பிறகு வரும் 2 ஆண்டுகளுக்குள் விண்ணப்பிக்க வேண்டும்.

# ஏற்றுமதியாளர்களுக்கு
## இந்திய ரிசர்வ் வங்கி (RBI) வழங்கியுள்ள சலுகைகள்

ஏற்றுமதியாளர்களுக்கு இந்திய ரிசர்வ் வங்கி (RBI) வழங்கியுள்ள சலுகைகள்குறித்த தகவல்கள் இதோ:

- **கூடுதல் கால அவகாசம்**: வெளிநாட்டு வாங்குபவர்களிடமிருந்து பணம் பெறுவதற்கான கால வரம்பு 9 மாதங்களிலிருந்து 15 மாதங்களாக உயர்த்தப்பட்டுள்ளது.
- **நீட்டிக்கப்பட்ட கடன் காலம்**: வங்கிகள் இனி ஏற்றுமதி கடன்களை (Export Loans) 450 நாட்கள் வரை வழங்க முடியும்.
- **கால நீட்டிப்பு**: மத்திய கிழக்கு நாடுகளில் நிலவும் கப்பல் போக்குவரத்து சிக்கல்கள் காரணமாக, மார்ச் 2026-ல் முடிவடைய இருந்த இந்தச் சலுகைகள் தற்போது ஜூன் 30, 2026 வரை நீட்டிக்கப்பட்டுள்ளன.
- **கண்காணிப்பு**: நிலவரத்தை RBI உன்னிப்பாக கவனித்து வருகிறது. தேவைப்படும் பட்சத்தில் உரிய நேரத்தில் தலையிட்டு கூடுதல் நடவடிக்கைகளை எடுக்கும்.

இந்த நடவடிக்கைகள் உலகளாவிய விநியோகச் சங்கிலித் தடைகளால் பாதிக்கப்பட்டுள்ள இந்திய ஏற்றுமதியாளர்களுக்கு பெரும் நிம்மதியை அளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. RBI வழங்கியுள்ள இந்த விரிவான சலுகைகளைப் பெற, ஏற்றுமதியாளர்கள் தங்கள் வங்கியை அணுகுவதற்கான வழிமுறைகள் இதோ:

1. சம்பந்தப்பட்ட வங்கி அதிகாரியைத் தொடர்பு கொள்ளவும் (Approach Your Bank)
   - நீங்கள் ஏற்கனவே ஏற்றுமதி கடன் (Export Credit) பெற்றுள்ள வங்கியின் கிளை மேலாளர் அல்லது உறவு மேலாளரை (Relationship Manager) நேரடியாக அணுகவும்.
   - இந்தச் சலுகைகள் வணிக வங்கிகள், கூட்டுறவு வங்கிகள் மற்றும் NBFC-கள் என அனைத்து நிதி நிறுவனங்களுக்கும் பொருந்தும்.
2. விண்ணப்பம் மற்றும் காரணங்களைச் சமர்ப்பித்தல் (Submission of Application)
   - மத்திய கிழக்கு நாடுகளில் நிலவும் போர் மற்றும் கப்பல் போக்குவரத்து சிக்கல்களால் (West Asia Crisis) உங்கள் வணிகம் எவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளது என்பதை விளக்கி ஒரு கடிதம் அல்லது விண்ணப்பத்தை சமர்ப்பிக்க வேண்டும்.
   - சரக்கு அனுப்புவதில் ஏற்பட்டுள்ள தாமதம், கூடுதல் கப்பல் கட்டணம் அல்லது வாங்குபவரிடமிருந்து பணம் வருவதில் உள்ள தாமதம் ஆகியவற்றைக் குறிப்பிடவும்.
3. தேவையான ஆவணங்கள் (Required Documents)
   - ஏற்றுமதி ஆவணங்கள்: கப்பல் ரசீதுகள் (Shipping Bills), விலைப்பட்டியல் (Invoices) மற்றும் ஏற்றுமதி தரவு செயலாக்க அமைப்பு (EDPMS) அறிக்கைகள்.
   - கடன் விவரங்கள்: ஏற்கனவே உள்ள பேக்கிங் கிரெடிட் (Packing Credit) அல்லது ஏற்றுமதிக்கு முந்தைய / பிந்தைய கடன் விவரங்கள்.
   - மாற்று தீர்வு கோரிக்கை: ஒருவேளை உங்களால் சரக்கை அனுப்ப முடியாவிட்டால், உள்நாட்டு விற்பனை மூலம் கடனை அடைக்க அனுமதி கோரும் ஆவணங்களைச் சமர்ப்பிக்கலாம்.
4. தானியங்கிச் சலுகை (Automatic Extension for Realisation)
   - வெளிநாட்டிலிருந்து பணம் பெறுவதற்கான 15 மாத கால அவகாசம் தானாகவே நடைமுறைக்கு வரும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கு நீங்கள் தனியாக விண்ணப்பிக்கத் தேவையில்லை, ஆனால் வங்கியில் உங்கள் EDPMS நிலையை அவ்வப்போது சரிபார்த்துக்கொள்ளவும்.
5. புதிய கடன்களுக்கான கால வரம்பு (New Loan Tenure)
   - ஜூன் 30, 2026 வரை வழங்கப்படும் புதிய ஏற்றுமதி கடன்களுக்கு 450 நாட்கள் வரை கால அவகாசம் கிடைக்கும் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

**முக்கிய குறிப்பு**: உங்கள் கடன் கணக்கு ஆகஸ்ட் 31, 2025 அன்று "Standard" பிரிவில் (வழுவில்லாத கணக்காக) இருந்திருக்க வேண்டும் என்பது ஒரு முக்கிய நிபந்தனையாக இருக்கலாம்.

# குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான தேசிய விருதுகள் 2024: மீண்டும் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன

குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான (எம்எஸ்எம்இ) தேசிய விருதுகள் 2024க்கான இணையவழி விண்ணப்பச் செயல்முறை மீண்டும் தொடங்கப்படுவதாக குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் அமைச்சகம் அறிவித்துள்ளது. இந்த மதிப்புமிக்க விருதுகள், பல்வேறு துறைகளில் உள்ள எம்எஸ்எம்இ தொழில்முனைவோரின் சிறப்பான பங்களிப்புகளை அங்கீகரிப்பதையும், இந்தத் துறையில் புதுமை, சிறப்பு மற்றும் வளர்ச்சியை ஊக்குவிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளன. இந்த விருதுகள், தொழில்முனைவோரின் தேசிய அளவிலான சிறந்த செயல்பாடுகளை அங்கீகரிப்பதன் மூலம் அவர்களை ஊக்குவிக்கவும் உற்சாகப்படுத்தவும் உதவுகின்றன.

தேசிய எம்எஸ்எம்இ விருதுகள் 2024-க்கு, பின்வரும் பிரிவுகளிலிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன: உற்பத்தித் தொழில்முனைவு (தொழில்நுட்ப ரீதியாகத் திறன்மிக்க நிறுவனங்கள்), சேவைத் தொழில்முனைவு (நடுத்தர நிறுவனங்கள்), ஏற்றுமதி சார்ந்த சேவை நிறுவனங்கள், மகளிர் தொழில்முனைவு (குறு மற்றும் சிறு நிறுவன சேவைகள்), பட்டியலின/ பட்டியல் பழங்குடியின தொழில்முனைவோர் (சிறு மற்றும் குறு நிறுவன உற்பத்தி மற்றும் சேவைகள்), மாற்றுத்திறனாளி தொழில்முனைவோர் (உற்பத்தி மற்றும் சேவை நிறுவனங்கள்), மற்றும் வடகிழக்கு பிராந்தியத்தைச் சேர்ந்த தொழில்முனைவோர் (குறு மற்றும் சிறு நிறுவன உற்பத்தி மற்றும் சேவைகள்).

தேசிய எம்எஸ்எம்இ விருதுகள் 2024-க்கான விண்ணப்பப் படிவத்தை, விருதுக்கான அதிகாரப்பூர்வ இணையதளத்தில் (https://dashboard.msme.gov.in/na/Ent_NA_Admin/Ent_NA_Ent.aspx) விண்ணப்பிக்கலாம். விண்ணப்பிப்பதற்கான கடைசி நாள் 2026 ஏப்ரல் 20. இந்த மதிப்புமிக்க விருதுகளுக்குத் தகுதி பெறுவதை உறுதிசெய்ய, குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் இந்தக் காலக்கெடுவுக்குள் தங்கள் விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றன

விண்ணப்பச் செயல்முறையைச் சுமுகமாக எளிதாக்கும் வகையில், சென்னையில் உள்ள எம்எஸ்எம்இ மேம்பாட்டு அலுவலகம், கோயம்புத்தூர், மதுரை மற்றும் திருநெல்வேலியில் உள்ள அதன் கிளை அலுவலகங்களுடன் இணைந்து, குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு வழிகாட்டுதலையும் உதவியையும் வழங்கும். வழிகாட்டுதல்களின்படி படிவங்களைப் பூர்த்தி செய்வதிலும், தேவையான ஆவணங்களைச் சமர்ப்பிப்பதிலும் அவை விண்ணப்பதாரர்களுக்கு ஆதரவளிக்கும்.

# ITC ON JOB WORK

## Input tax credit in respect of inputs and capital goods sent for job-work

The following table provides relevant Sections/Rules relating to Job Work

| Section or Rule | Description |
|---|---|
| Section 16 | Eligibility and conditions for taking input tax credit |
| Section 143 | Job work procedure |
| Rule 55 | Transportation of goods without issue of invoice |

**Definition:** Any treatment or process undertaken by a person on goods belonging to another registered person as defined under Section 2(68).

**Job worker:** A person who undertakes any treatment or process on goods belonging to another registered person.

**Principal:** A person on whose behalf an agent carries on the business of supply or receipt of goods or services or both.

The principal can take credit of input tax on inputs or capital goods sent to job worker subject to fulfilment of the following conditions and restrictions as stipulated in Section 19 and Section 143 read with Rule 45:

- The credit of inputs / capital goods can be taken even if inputs / capital goods were sent directly to job-worker's premises without bringing it to principal's place of business.
- In case of direct supply, the period of 1 year / 3 years shall be reckoned from the date the job worker receives such inputs/ capital goods.
- The inputs / capital goods, after completion of job-work, are to be received back by the principal within 1 year / 3 years respectively, of their being sent out.
- If the inputs / capital goods are not received back within 1 year / 3 years, it shall be deemed that such inputs / capital goods had been supplied by principal to the job worker on the day when the said inputs / capital goods were sent out.
- In case of non-receipt of the inputs / capital goods within the time prescribed, the principal shall issue an invoice for the same and declare such supplies in his return for that particular month in which the time period of one year/ three years has expired.
- To issue a delivery challan for transfer of inputs/ capital goods to the job-workerincluding where they are sent directly (to maintain paper trail of transaction)
- The details of delivery challans for goods dispatched to job worker or received from job worker or sent from one job worker to another during a specified period shall be included in Form GST ITC-04 to be furnished on or before 25th day of the month succeeding that that specified period, Specified period here refers to the period of six consecutive months commencing from 1st April and the 1st October in respect of the principal whose aggregate turnover in the immediately preceding financial year exceeds Rs. 5 crores. If the turnover does not exceed Rs. 5 crores, then a financial year is the specified period.

Delivery challan shall contain details as prescribed in Rule 55 of CGST Rules. All delivery challans issued in respect of inputs sent to a job-worker and those received back are to be reported in Form GSTR-1.

**Exception:** The time limits, for Inputs /Capital goods which are to be received back within 1 year/ 3 years, shall **not apply to moulds and dies, jigs and fixtures, or tools** sent out to ajob worker for job work.

# மாறும் நுகர்வு கலாச்சாரம்

நுகர்வெனும் பெரும்பசி மனிதர்களை இந்தத் தொழில்நுட்ப உலகில் பல வழிகளில் ஆட்கொண்டிருக்கிறது. கடந்த பத்தாண்டுகளில் இந்திய நுகர்வுக் கலாச்சாரத்தின் கட்டமைப்பு பெரும் மாற்றத்துக்கு உள்ளாகியிருக்கிறது. நுகர்வோராகிய நாம் முன்பு செலவழித்ததைவிட இப்போது அதிகம் செலவு செய்கிறோம். ஆனாலும் உணவுப் பொருட்களுக்கு குறைவாகவும், மற்ற பொருட்களுக்கு அதிகமாக செலவிடுகிறோம் என புள்ளிவிவரம் கூறுகிறது. ஒரு குடும்பத்தின் மொத்தச் செலவில் உணவுக்கென செலவிடுவது 50 சதவீதத்துக்கும் குறைவாக இருக்கிறது.

அதே நேரம் எந்த வருமானப் பிரிவைச் சேர்ந்தவராக இருந்தாலும் ரெஃப்ரிஜிரேட்டர், வாகனங்கள், செல்போன் போன்ற நீண்டநாள் உழைக்கக்கூடிய பொருட்களுக்கு (durable goods) செலவிடுவது அதிகரித்திருக்கிறது.

ஒரு காலத்தில் இந்தப் பொருட்களை நாம் வாங்கமாட்டோமா என்றிருந்த நிலை மாறி இன்றைக்கு பெரும்பாலானோர் வாங்கக்கூடிய அவசியமான பொருட்களாக இவை மாறியிருக்கின்றன. நாடு முழுவதும் சுமார் 2.5 லட்சம் குடும்பத்தினரிடம் நடத்திய ஆய்வின் முடிவு ஸ்வீட்டு நுகர்வுச் செலவு ஆய்வு, 2025 (Household Consumption Expenditure Survey HCSE) என்கிற பெயரில் அறிக்கையாக வெளியாகி இருக்கிறது. இதில் பங்கேற்றவர்களில் 60% பேர் கிராமப்புறத்தைச் சேர்ந்தவர்கள். இந்த ஆய்வில் உணவுப் பொருட்களான தானியங்கள், பால் போன்றவையும் எரிபொருள் நுகர்வு, மருத்துவச் செலவு மற்றும் பல்வேறு வகையான நீண்டகாலம் உழைக்கக்கூடிய பொருட்கள் குறித்தும் விவரங்கள் சேகரிக்கப்பட்டன.

அதிகரித்து வரும் வருமானம், மாறிவரும் முன்னுரிமைகள் மற்றும் பொருளாதார நிலைமைகளை இந்தியக் குடும்பத்தினர் எப்படி எதிர்கொள்கிறார்கள் என்பதைக் கண்டறிவது இந்த ஆய்வின் நோக்கமாக இருந்தது. உணவுக்காகச் செலவழிக்கும் தொகை தொடர்ந்து குறைந்து வருவதும், நீண்டகாலம் உழைக்கும் பொருட்களின் மீது செலவழிக்கும் தொகை அதிகரித்து வருவதும் ஆய்வில் தெரியவந்துள்ளது.

# தங்க நகை விற்பனையில் வெளிப்படைத்தன்மையைக் கொண்டுவர

# HUID (Hallmark Unique ID) - முக்கிய சிறப்பம்சங்கள்

தங்க நகை விற்பனையில் வெளிப்படைத்தன்மையைக் கொண்டுவர மத்திய அரசு எடுத்துள்ள இந்த அதிரடி நடவடிக்கை குறித்த முக்கியத் தகவல்கள் இதோ:

**HUID (Hallmark Unique ID) - முக்கிய சிறப்பம்சங்கள்:**

தனித்துவமான அடையாள எண்: ஒவ்வொரு நகைக்கும் ஒரு பிரத்யேக 6 இலக்க ஆல்பா-நியூமரிக் (Alphanumeric) எண் வழங்கப்படும். இது அந்த நகைக்கு மட்டுமே உரியது; வேறொரு நகைக்குப் பயன்படுத்த முடியாது. இதன் மூலம் வாடிக்கையாளர்கள் வாங்கும் தங்கம் எவ்வளவு தூய்மையானது (Purity) என்பதை எளிதாக உறுதி செய்ய முடியும். ஏமாற்று வேலைகளுக்கு இனி இடமிருக்காது. ஒரே ஹால்மார்க் முத்திரையை பல நகைகளுக்குப் பயன்படுத்தி வந்த மோசடிகளைத் தடுக்கவே இந்த 'யுனிக் ஐடி' (Unique ID) முறை கட்டாயமாக்கப்படுகிறது.

தற்போது சுமார் 400 மாவட்டங்களில் மட்டுமே ஹால்மார்க் கட்டாயமாக உள்ளது. விரைவில் இது இந்தியாவிலுள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட உள்ளது.

**வாடிக்கையாளர்களுக்கு என்ன லாபம்?**

உங்கள் நகையில் உள்ள HUID எண்ணை "BIS Care" செயலியில் உள்ளீடு செய்து, அந்த நகையின் தரம், அது எங்கே ஹால்மார்க் செய்யப்பட்டது போன்ற விவரங்களை நீங்களே சரிபார்க்கலாம். பழைய நகைகளை விற்கும்போதோ அல்லது மாற்றும்போதோ, அதன் தூய்மை குறித்து எந்த சந்தேகமும் இருக்காது என்பதால் சரியான விலை கிடைக்கும்.

நகைக் கடைகள் தரம் குறைந்த தங்கத்தை அதிக விலைக்கு விற்பதைத் தடுக்க இது ஒரு வலிமையான ஆயுதமாகும். உங்கள் நகையில் உள்ள HUID (Hallmark Unique ID) எண்ணைச் சரிபார்ப்பது மிகவும் எளிது. இந்தியத் தர நிர்ணய அமைவனம் (BIS) இதற்காகவே ஒரு பிரத்யேக செயலியை வழங்கியுள்ளது.

**BIS Care App மூலம் சரிபார்க்கும் முறை:**

உங்கள் ஸ்மார்ட்போனில் (Android அல்லது iOS) "BIS Care" என்ற செயலியைப் பதிவிறக்கம் செய்து நிறுவவும். உங்கள் பெயர், மொபைல் எண் மற்றும் மின்னஞ்சல் முகவரியைக் கொடுத்து ஒருமுறை பதிவு செய்யவும். செயலியைத் திறந்தவுடன் முகப்புத் திரையில் உள்ள "Verify HUID" என்ற விருப்பத்தைத் தேர்ந்தெடுக்கவும்.

உங்கள் நகையில் பொறிக்கப்பட்டுள்ள 6 இலக்க ஆல்பா-நியூமரிக் (எழுத்துக்கள் மற்றும் எண்கள் கலந்த) அடையாள எண்ணை அங்கு உள்ளீடு செய்யவும். "Search" பொத்தானை அழுத்தியதும், அந்த நகை குறித்த முழு விவரங்களும் திரையில் தோன்றும்:

1. நகை எந்தக் கடையால் விற்பனை செய்யப்பட்டது.
2. எந்த ஹால்மார்க்கிங் மையத்தில் (AHC) தரம் சோதிக்கப்பட்டது.
3. தங்கத்தின் தூய்மை (உதாரணமாக 22K, 18K போன்றவை).
4. ஹால்மார்க் செய்யப்பட்ட தேதி.

**கவனிக்க வேண்டிய முத்திரைகள்:**

ஒரு முறையான ஹால்மார்க் நகையில் மூன்று முத்திரைகள் இருக்க வேண்டும்:

1.BIS லோகோ (முக்கோண வடிவம்).
2.தங்கத்தின் தூய்மை (எ.கா. 22K916).
3.6 இலக்க HUID எண்.

**முக்கிய குறிப்பு:** உங்கள் நகையில் உள்ள HUID எண் செயலியில் காட்டப்படும் விவரங்களுடன் பொருந்தவில்லை என்றால், நீங்கள் அந்தச் செயலியின் மூலமாகவே நேரடியாக புகார் (File a Complaint) அளிக்க முடியும்.

**பழைய நகைகளுக்கும் HUID (Hallmark Unique ID) முத்திரை பெற முடியுமா?**. நிச்சயம் முடியும். அதற்கான வழிமுறைகள் இதோ:

பழைய ஹால்மார்க் இல்லாத நகைகளை நீங்கள் தாராளமாக ஹால்மார்க் செய்து HUID எண்ணைப் பெறலாம். இதற்கு இரண்டு வழிகள் உள்ளன.

1. **பதிவுபெற்ற நகைக்கடை மூலம்:** உங்கள் நகையை ஒரு BIS பதிவுபெற்ற நகைக்கடையிடம் ஒப்படைக்கலாம். அவர்கள் அதை BIS அங்கீகாரம் பெற்ற ஹால்மார்க்கிங் மையத்திற்கு (Assaying and Hallmarking Centre - AHC) அனுப்பி, தரப்பரிசோதனை செய்து HUID முத்திரையுடன் திருப்பித் தருவார்கள்.
2. **நேரடியாக ஹால்மார்க்கிங் மையம் மூலம்:** ஒரு நுகர்வோர் என்ற முறையில், நீங்களே நேரடியாக அங்கீகாரம் பெற்ற ஹால்மார்க்கிங் மையத்திற்குச் சென்று உங்கள் நகையைச் சோதித்து முத்திரை பெறலாம்.

**அதற்கான கட்டணம் எவ்வளவு?**

ஒரு நகைப்பொருள் (எ.கா. ஒரு மோதிரம் அல்லது ஒரு சங்கிலி) ஹால்மார்க் செய்ய மிகக்குறைந்த கட்டணமாக ₹45 (+ GST) மட்டுமே வசூலிக்கப்படுகிறது.குறைந்தபட்சமாக ஒருமுறைக்கு ₹200 (+ GST) வரை கட்டணம் வசூலிக்கப்படலாம் (ஒன்றிற்கும் மேற்பட்ட நகைகள் இருந்தால் இது லாபகரமானது).

**நகையின் தரம் குறைந்திருந்தால் என்ன ஆகும்?**

ஹால்மார்க்கிங் மையத்தில் உங்கள் நகையைச் சோதிக்கும்போது, அது நீங்கள் நினைத்த தரத்தை விட (உதாரணமாக 22லு என்று நினைத்தீர்கள், ஆனால் அது 18K ஆக இருந்தால்) குறைவாக இருந்தால், அந்த உண்மையான தரத்தின் அடிப்படையிலேயே முத்திரை குத்தப்படும்.

**பழைய நகைகளை விற்பனை செய்ய இது அவசியமா?**

தற்போதைய விதிகளின்படி, வாடிக்கையாளர்கள் தங்கள் பழைய ஹால்மார்க் இல்லாத நகைகளை நகைக்கடைகளிடம் விற்பனை செய்யவோ அல்லது மாற்றிக்கொள்ளவோ எந்தத் தடையும் இல்லை. நகைக்கடைக்காரர்கள் பழைய நகைகளை வாங்கிக்கொள்ளலாம். ஆனால், அவர்கள் அதை மீண்டும் விற்கும்போது கண்டிப்பாக HUID முத்திரை குத்தியே விற்க வேண்டும்.

**நினைவில் கொள்க:** உங்கள் பழைய நகைகளின் உண்மையான மதிப்பையும் தங்கத்தின் தூய்மையையும் உறுதிப்படுத்திக்கொள்ள HUID முத்திரை பெறுவது உங்களுக்கு எதிர்காலத்தில் அதிக லாபத்தைத் தரும்.

# INCOME TAX
# NEW FORMS 2026

| Purpose / Description | Previous Form (IT Rules 1962) | New Form (IT Rules 2026) |
|---|---|---|
| Declaration to Avoid TDS | 15G / 15H | Form 121 |
| Employee Inv / HRA Declaration | 12BB | Form 124 |
| TDS Salary Certificate | Form 16 | Form 130 |
| Annual Tax Statement (AIS/Tax Credit) | 26AS | Form 168 |
| TDS Certificate (Non-Salary) | 16A | Form 131 |
| TCS Certificate | 27D | Form 133 |
| Q-TDS Return (Salaries) | 24Q | Form 138 |
| Q-TDS Return (Non-Salary Resident) | 26Q | Form 140 |
| TDS on Property, Rent, VDA (Consolidated) | 26QB / QC / QD / QE | Form 141 |
| Q-TDS Return (Non-Resident) | 27Q | Form 144 |
| Foreign Remittance Information | 15CA | Form 145 |
| Accountant's Certificate for Remittance | 15CB | Form 146 |
| Tax Audit Report | 3CA / 3CB / 3CD | Form 26 |
| Statement of Perquisites & Amenities | 12BA | Form 123 |
| Relief for Salary Arrears (Sec 89) | 10E | Form 39 |
| Foreign Tax Credit Claim | Form 67 | Form 44 |
| Application for Lower TDS/TCS | Form 13 | Form 128 |
| PAN Application (Foreign/NRIs) | 49AA | Form 95 |

# டீசல் ஜெனரேட்டர்களில் எத்தனால் பயன்படுத்தலாம்

பெட்ரோலில் எத்தனால் கலக்கும் திட்டம் பெரும் வெற்றி அடைந்துள்ள நிலையில், அடுத்தக்கட்டமாக டீசல் ஜெனரேட்டர்களிலும் எத்தனாலை பயன்படுத்துவது அவசியம் என்று ஜி.இ.எம்.ஏ., எனும் தானிய எத்தனால் உற்பத்தியாளர்கள் சங்கத்தின் துணைத் தலைவர் பிரசாந்த் ஜெய்ஸ்வால் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, இந்தியாவின் தற்போதைய எத்தனால் உற்பத்தி திறன் ஆண்டுக்கு 1800 கோடி லிட்டராக உள்ளது. பெட்ரோலில் கலக்கப்படுவதை தாண்டி, இந்த உற்பத்தியை முழுமையாக பயன்படுத்த புதிய தேவைகளை உருவாக்க வேண்டியது கட்டாயமாகிறது.

டெலிகாம் டவர்கள், மருத்துவமனைகள், வணிக வளாகங்கள் மற்றும் தொழிற்சாலைகளில் பரவலாக பயன்படுத்தப்படும் டீசல் ஜெனரேட்டர்களை எத்தனால் பயன்பாட்டிற்கு மாற்றுவதன் வாயிலாக, ஆண்டுக்கு கூடுதலாக 1300 முதல் 2000 கோடி லிட்டர் எத்தனால் தேவை உருவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆரம்ப கட்டமாக, தற்போதுள்ள டீசல் ஜெனரேட்டர்களில் சிறிய மாற்றங்களை செய்து, எத்தனால் மற்றும் டீசல் இரண்டையும் பயன்படுத்தும் முறைக்கு மாறலாம். இதன் பின், மத்திய அரசின் மேக்-இன் இந்தியா திட்டத்தின் கீழ் 100 சதவீத எத்தனால் ஜெனரேட்டர்களை உள்நாட்டிலேயே தயாரிக்கலாம். இவ்வாறு அவர் தெரிவத்தார்.

# கடன் தவணை செலுத்த அவகாசம் நிதி அமைச்சகம் தீவிர பரிசீலனை

மேற்காசிய போர் காரணமாக ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியை சமாளிக்க, வங்கி கடன் வாங்கியவர்கள் தவணைகளை திருப்பி செலுத்துவதற்கு கால அவகாசம் வழங்க. மத்திய அரசு தீவிரமாக பரிசீலித்து வருவதாக, நிதி அமைச்சக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இது குறித்து அவ்வட்டாரங்கள் கூறியதாவது: தொழில் நிறுவனங்கள் வாங்கிய வங்கி கடன்களை தவணைகளாக திருப்பி செலுத்த 3-6 மாத கால அவகாசம் வழங்குவது குறித்து, நிதி அமைச்சகத்துக்குள் விரிவான ஆலோசனைகள் நடந்து வருகின்றன. ஏற்றுமதியாளர்கள் மற்றும் பல்வேறு தொழில் துறையினர் விடுத்த கோரிக் கையை ஏற்று, அரசு இந்த முடிவை எடுக்க உள்ளது. மேற்காசியா போர் காரணமாக எரிசக்தி வினியோக முறையில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. இதனால், மூலப்பொருள் விலையேற்றம் மற்றும் நிதி நெருக்கடியால் பாதிக்கப்பட் டுள்ள குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு நிவாரணம் வழங்குவ தற்கான வழிமுறைகளும் ஆராயப்பட்டு வருகின்றன. போரால் தொழில் துறைக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகளையும் மத்திய அரசு மதிப்பீடு செய்து வருகிறது. இவ்வாறு நிதி அமைச்சக வட்டாரங்கள் கூறின.



# உணவு தரச்சான்றிதழ்களை புதுப்பிக்க தேவையில்லை

## உணவு பாதுகாப்பு ஆணையம் அறிவிப்பு

உணவு பொருட்கள் தயாரிப்பு மற்றும் விற்பனைக்கு தேவையான, எப்.எஸ்.எஸ்.ஏ.ஐ., எனப்படும் உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையத்தின் உரிமங்கள் மற்றும் பதிவு சான்றிதழ்களை இனி புதுப்பிக்க தேவை இல்லை, அவை நிரந்தரமாக செல்லும் என மத்திய அரசு அறிவித்து உள்ளது.

உணவு சார்ந்த தொழில்கள் செய்வதை எளிதாக்கும் வகையில் இந்த அதி ரடி சீர்திருத்தம் கொண்டு வரப்பட்டுள்ளது. இது குறித்து எப்.எஸ். எஸ்.ஏ.ஐ., விடுத்துள்ள அறிக்கை:

உணவு தொழில் செய்வோர் தங்களது உரிமங்கள் மற்றும் பதிவு சான்றிதழ் குறிப்பிட்ட கால இடைவெளியில் புதுப்பிக்க வேண்டிய அவசியம் இனி இல்லை. ஒருமுறை பெற்றால் அது நிரந்தரமாக செல்லும் வகையில், நடை முறையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இந்த சீர்திருத்தத்தால், உணவு தொழில் முனைவோர் அடிக்கடி அரசு அலுவல கங்களுக்கு அலைய வேண் டிய சுமை குறையும்.

நகராட்சி அல்லது உள்ளாட்சி அமைப்புகளில் பதிவு செய்துள்ள தெருவோர உணவு வியாபாரிகள், இனி தனியாக எப்.எஸ்.எஸ்.ஏ.ஐ., பதிவு செய்ய வேண்டிய அவசியம் இல்லை. அவர்கள் ஏற்கனவே செய்துள்ள பதிவே போதுமானது என அறிவிக்கப் பட்டு உள்ளது.இந்த சலுகை வாயிலாக நாடு முழுவதும் உள்ள ள்ள கிட்டத்தட்ட 10 லட்சம் தெருவோர வியாபாரி பயனடைவார்கள் என்று எப்.எஸ்.எஸ்.ஏ.ஐ.. அமைப்பு கூறியுள்ளது.

வருவாய் வரம்பு உயர்வு எப்.எஸ்.எஸ்.ஏ.ஐ., பதிவுக்கான ஆண்டு வருவாய் வரம்பு 12 லட்சம் ரூபாயிலிருந்து 1.5 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டு உள்ளது. இந்த புதிய விதி முறை ஏப்., 1 2026 முதல் அமலுக்கு வரும். இதன் வாயிலாக சிறு மற்றும் குறு நிறுவனங்களை துவக்குவதற்கான விதிமுறைகள் ஆறையும் தவிமுன்கூட்டி. உடனடி பதிவு கிடைக்கும். இதனால், சிறு, குறு தொழில் எளிமையாகும். துவங்குவது அதில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

**பதிவு, உரிமம் பெற ஆண்டு வருவாய் வரம்புகள்**

| வகை | புதிய வரம்பு |
|---|---|
| எப்.எஸ்.எஸ்.ஏ.ஐ., பதிவு | ரூ. 1.50 கோடி வரை |
| மாநில உரிமம் | ரூ. 50 கோடி வரை |
| மத்திய உரிமம் | ரூ. 50 கோடிக்கு மேல் |

### ஸௌராஷ்ட்ர சேம்பர்
### ஆலோசனைக் கூட்டம்

கடந்த மார்ச் 23ம் தேதி சேம்பர் முன்னாள் தலைவர்களுடன் நிர்வாகிகள் கூட்டம் நடைபெற்றது. சேம்பர் வளர்ச்சிப் பணிகள் மற்றும் முக்கிய சீர்திருத்தப்பணிகள் குறித்து விவாதிக்கப்பட்டது. அதன்படி, சேம்பருக்கு ஜிஎஸ்டி பெறுவது, ஆண்டு சந்தா மற்றும் ஆயுட்கால உறுப்பினர்கள் கட்டணத்தில் மாற்றம் கொண்டு வருவது, ஆயுட்கால உறுப்பினர்களை இணைப்பதில் புதிய கட்டுப்பாடுகள் கொண்டுவருவது போன்றவை குறித்து ஆலோசிக்கப்பட்டது.

## ALLOWANCES & PERQUISITES
### Old rule & New rule 2026

| Particular | Old Rule | New Rule (2026) |
|---|---|---|
| House Rent Allowance (HRA) | 50% salary (4 metro cities) | **50% salary** (8 cities incl. Bengaluru, Hyderabad, Pune, Ahmedabad) |
| Children Education Allowance | ₹100 / month / child | **₹3,000 / month / child** |
| Hostel Expenditure Allowance | ₹300 / month / child | **₹9,000 / month / child** |
| Interest-Free Loan | ₹ 20,000 | **₹ 2,00,000** |
| Meal / Food Coupons | ₹50 per meal | **₹200 per meal** |
| Gifts / Festival Vouchers | ₹5,000 / year | **₹15,000 / year** |
| Transport Allowance | 70% capped at ₹10,000 | **70% capped at ₹25,000** |
| Motor Car (≤1.6L engine) | ₹1,800 + ₹900 | **₹5,000 + ₹3,000** |
| Motor Car (>1.6L engine) | ₹2,400 + ₹900 | **₹7,000 + ₹3,000** |
| Driver Perquisite | ₹900 / month | **₹3,000 / month** |

## GOVERNMENT APPS & PORTALS

| Name | Type | Primary Purpose |
|---|---|---|
| DigiLocker | Portal/App | Digital storage of govt documents; Aadhaar-linked |
| UMANG | App | Unified access to 1000+ Central & State services |
| MyGov | Portal | Citizen engagement, policy feedback & polls |
| GeM | Portal | Government e-Marketplace for public procurement |
| NSP | Portal | DBT-based scholarship disbursement |
| eCourts | Portal | Online judicial services & case status |
| SWAYAM | Portal | Govt MOOC platform for online education |
| BHIM | App | UPI-based digital payments |
| mParivahan | App | RC, DL, vehicle & e-Challan services |
| Aarogya Setu | App | Health surveillance & alerts |
| e-Shram | Portal | Unorganised workers database (12-digit UAN) |
| DigiYatra | App | Facial recognition-based airport travel |

# சட்டசபை தேர்தல்
# சத்தமில்லா சத்திய சோதனை

வரும் ஏப்ரல் 23ந் தேதி நடைபெற இருக்கின்ற சட்டசபை தேர்தல், தமிழகத்தின் தலைவிதியை தீர்மானிக்கும் வரலாற்று சிறப்புமிக்க தேர்தல் எனலாம். இந்த தேர்தல் இதுவரை நடந்து முடிந்த தேர்தல்களிலிருந்து முற்றிலும் மாறுபட்டது ஆகும். அனுதாப அலை போன்ற உணர்வுபூர்வ சமாச்சாரங்கள் இப்போது ஏதுமில்லை.

இந்த ஆட்சி தொடர வேண்டுமா? அல்லது மாற்றம் வேண்டுமா? என்ற இரண்டே கேள்விகள் நம்முன்னே நிற்கின்றன.

ஐந்து முனை போட்டி என்று ஐயம் அடைவதோ, நான்குமுனை போட்டி என நாணம் கொள்வதோ, மும்முனை போட்டி என முகத்தை சுழிப்பதோ, இல்லை இருமுனை போட்டிதான் என இருப்பில்லாமல் இருப்பதோ நமக்கு தேவையற்ற விஷயம்.

யார் வரக்கூடாது என்பது எப்படி மிக முக்கியமோ, அதைப்போலவே யார் வர வேண்டும் என முடிவு எடுக்க வேண்டிய இன்றியமையா தருணம், இது.


பல தடைகள், இயற்கை இடர்கள் அனைத்தையும் தாண்டி, உலகத்தின் நான்காவது மிகப்பெரிய பொருளாதார உயர்நிலையை எட்டியிருக்கும் நம் நாடு, மேலும் உயர்வடைய நம் பங்களிப்பு மிகமிக அவசியம். இந்த தேர்தலின் முடிவும், அதன் தாக்கமும் நிச்சயமாக இதில் பிரதிபலிக்கும்.

பகவத் கீதையில் உரைத்திருப்பதைப் போல, நாம் கடமையை கச்சிதமாக செய்ய வேண்டியது கட்டாயம். நமக்கு இந்த உரிமையைக் கொடுத்த அரசியல் சாசனத்திற்கு பெருமை சேர்ப்பது நம் பொறுப்பு. எத்துனைமுறை கேட்டிருக்கிறோம், தினை விதைத்தவன், தினை தான் அறுப்பான் என்று. இப்போது விதைக்கும் நேரம். அறுவடை என்ற விடையை காலம் சரியாக பதில் அளிக்கும்.

100% வாக்குப்பதிவு என்பதே நம் இலக்கு. நம் குழந்தைகள் 100/100 மதிப்பெண்கள் பெற்றால், அவர்களை பெற்றதற்காக மகிழ்வோம். அதேபோல, 100 சதவீத வாக்கு பதிவானால், பாரதத்தாய் ஜனநாயகத்தை பெற்றதற்காக பெருமை கொள்வாள். இதற்கு நாம் ஒவ்வொருவரும் ஒத்துழைக்க வேண்டும்.

அடுத்ததாக, வேட்பாளரை தேர்ந்தெடுத்து வாக்கு அளிப்பதில் அக்கறை கொள்ள வேண்டும். கறை படிந்தவர்களை களை எடுத்து, தொலைநோக்குப் பார்வை கொண்டவர்களை தொண்டாற்றத் தேர்வு செய்ய வேண்டும்.

வெற்றி வாய்ப்பு உள்ளவர்களுக்கே வாக்கு செலுத்துவது என்பது வெற்றுக்கூத்து. தகுதி உள்ளவருக்கு வெற்றி அடைய சந்தர்ப்பம் கொடுப்பது தான் சாமர்த்தியம்.



பணம் பெற்றுக்கொண்டு வாக்கு போடுவது, லஞ்சம் வாங்கி, நாட்டிற்கு வஞ்சம் செய்வது போன்றது. அதற்கு தடை போடுவோம். வாக்காளர்களுக்கு பணம் கொடுக்க வருபவர்களை, சட்டத்தின் முன் நிறுத்துவோம்.

தேர்தல் நாள் அன்று விடுமுறை அறிவிக்கப்படுவதால், சுற்றுலா, புனித யாத்திரை என்று புறப்படாமல், வாக்குச் சாவடிக்குள் உலா வந்து, புனிதக்கடமையை நிறைவேற்றினால், பின்வரும் தலைமுறைகள் தலைவணங்கும். நம் வாரிசுகளுக்கு நாம் விட்டுச் செல்லும் அசைந்தும் அசையாத அசத்தலான சொத்து, இந்த நம் பிரதிநிதித்துவ பண்பாடு ஆகும்.

வாக்களித்து “என்னத்தை கண்டோம்“ என்ற விரக்தி மனப்பான்மையை விரட்டி அடிப்போம். நம்பிக்கை கொண்டு புதுயுகம் படைப்போம். வேட்பாளர்கள், அவர்தம் கட்சிகள் தரும் தேர்தல் வாக்குறுதிகளை கவனத்துடன் கேட்டறிந்து, அவை சாத்தியமா? நடைமுறைப்படுத்த முடியுமா? நாட்டிற்கு நன்மை பயக்குமா? என்று ஆராய்ந்து இவற்றையெல்லாம் முன்னிலைப்படுத்தி முடிவெடுத்து வாக்களிக்க வேண்டும்.

நமது வாக்கு ரகசியம் காக்கப்படுகிறது. எவருக்கும், நாம் யாருக்கு வாக்களித்தோம் என்பது தெரியப்போவதில்லை. அப்படியிருக்க, தாம் கண்டுபிடித்துவிடுவதாகக் கூறுபவர்களின் வாதம், பிதற்றலே! எனவே, அஞ்சத் தேவையில்லை.

அன்னை, தந்தை, சுற்றம் போன்றவர்களை நாம் தேர்ந்தெடுக்க முடியாது. எனினும், நண்பர்களை தேர்ந்தெடுக்கும் உரிமை, வாய்ப்பு, கடமை, நம்மை மட்டுமே சேரும். அதைப்போல, வேட்பாளர்களை தேர்ந்தெடுக்கும் பொறுப்பும் நம்மை சார்ந்ததே!. வள்ளுவம் கூறும் – “இடுக்கண் களைவதாம் நட்பு“ என்பது போல, நாம் தேர்ந்தெடுக்கும் வேட்பாளரும் நாட்டின் நன்மையை நட்புடன் நாடும் மேன்மை பொருந்தியவராக இருப்பதே நாட்டிற்கு நாம் செலுத்தும் பிரதி உபகாரம்.

நல்லவரை தேர்ந்தெடுப்போம்! நம் நாட்டை முதன்மை வல்லரசு ஆக்குவோம்!!

*– வீரஜா*

## இந்திய அரசின்

# புதிய கிரேடு முறை ஓட்டுநர் உரிமம்

பிப்ரவரி 2026-ல், சாலை பாதுகாப்பை மேம்படுத்த இந்திய அரசு இந்த புதிய முறையை அறிமுகப்படுத்தியுள்ளது.

**இந்த முறையின் முக்கிய அம்சங்கள்:**

**புள்ளிகள் குறைப்பு:** அதிவேகமாகச் செல்லுதல், சிக்னலை மீறுதல் அல்லது வாகனத்தை ஓட்டும்போது அலைபேசி பயன்படுத்துதல் போன்ற விதிமீறல்களுக்கு உங்கள் உரிமத்திலிருந்து புள்ளிகள் குறைக்கப்படும்.

**தரவரிசை** (Grading): ஓட்டுநரின் ஒழுக்கத்தின் அடிப்படையில் அவர்களுக்கு கிரேடு அல்லது புள்ளிகள் வழங்கப்படும்.

**தண்டனைகள்:** ஒரு ஓட்டுநர் தனது அனைத்து புள்ளிகளையும் இழந்தால்:

**தற்காலிகத் தடை:** 6 மாதங்களுக்கு ஓட்டுநர் உரிமம் ரத்து செய்யப்படும்.

**நிரந்தர ரத்து:** மீண்டும் மீண்டும் விதிமீறலில் ஈடுபட்டால் உரிமம் முழுமையாக ரத்து செய்யப்படும்.

**தற்போதைய உரிமப் பிரிவுகள்:** இந்த புதிய தரவரிசை முறை நடத்தைக்கு மட்டுமே. நீங்கள் ஓட்டும் வாகனத்தின் அடிப்படையில் பிரிவுகள் மாறாது:

**MCWOG**: கியர் இல்லாத இருசக்கர வாகனங்கள் (Scooter).

**MCWG**: கியர் உள்ள இருசக்கர வாகனங்கள் (யஷ்வள).

**LMV**: கார், ஜீப் போன்ற இலகுரக வாகனங்கள்.

**HMV/HTV**: லாரி, பேருந்து போன்ற கனரக வாகனங்கள்.

புதிய உரிமத்திற்கு விண்ணப்பிக்க அல்லது கூடுதல் விவரங்களுக்கு பரிவாஹன் சேவா (Parivahan Sewa) இணையதளத்தைப் பயன்படுத்தலாம்.

# சிறுதொழிலுக்கு 'பேமென்ட்' தாமதித்தால் நிலுவை தொகைக்கு வருமான வரி விதிப்பு

மத்திய அரசின் வருமான வரி சட்டப்பிரிவு 43 பி(எச்) திருத்தப்படி, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு, சேவை கட்டணத்தை பெறுவது கடும் சவாலாக மாறி உள்ளது. எனவே, கட்டண தொகையை விரைந்து பெற ஏதுவாக, வருமான வரி சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. அதன்படி, கொடுக்க வேண்டிய சேவை கட்டண தொகையை, 45 நாட்களுக்குள் செலுத்த வேண்டும். தவறினால், நிதியாண்டின் நிறைவில், செலுத்தப்படாத செலவு தொகை வருமானமாக கருதி, 30 சதவீதம் வரை வருமான வரி விதிக்கப்படும். இரு தரப்பினரும் ஒப்பந்தம் செய்து கொண்டால், 45 நாட்களுக்குள் செலுத்தலாம் அல்லது ஒப்பந்தம் செய்யாவிடில், 15 நாட்களுக்குள் செலுத்த வேண்டுமென சட்டத்திருத்தம் செய்யப்பட்டுள்ளது. இதனால், தொழில் துறையினர் தங்களது உற்பத்தி சேவைகளுக்கான கட்டணத்தை, 45 நாட்களுக்குள் செலுத்துவது கட்டாயமாகியுள்ளது.

# இதழ் வெளியீடு




மதுரை விமான நிலையம் சர்வதேச அந்தஸ்து கிடைத்ததையடுத்து, கடந்த மார்ச் மாத லாப் ஸமாச்சார் இதழை மதுரை விமான நிலைய இயக்குநர் திரு. முத்துகுமார் அவர்களின் கரங்களால் வெளியீடு செய்யப்பட்டது. சர்வதேச அந்தஸ்து கிடைத்ததற்கு சேம்பர் நிர்வாகிகள் மற்றும் இதழ் குழுவினர் மதுரை மக்களின் சார்பாக நன்றி கூறி மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.









Published by : **K.K. Gnana Prabhakaran** on behalf of Sourashtra Chamber of Commerce, 5A, Pankajam Colony 3rd Cross Street, Teppakulam, Madurai - 625009
Printing by : **K.R. Ramalingam** @ Viswajith Printers, No. 1, Varpukannara Lane, Chinnakadai Street, Madurai - 625 001.
Editor : **K.K. Gnana Prabhakaran**

நம்பிக்கைக்கும், வலிமைக்கும்

**JSW COLOURON+ கூரைகள்**

JSW Steel

JSW கலர் ஆன் இந்தியாவின் முதன் முதலாக

தரசான்று பெற்ற வண்ணம் பூசிய கூரைகள்





## ஸ்ரீ சிவபாலாஜி ஸ்டீல்ஸ் பி. லிட்.

18B, நத்தம் ரோடு, திண்டுக்கல் - 624 003.

போன் : 0451 - 2470573, செல் : 84899 23302, 91, 92, 93, 63

கிளை : 1/37, அப்பலோ மருத்துவமனை கார் பார்க்கிங் அருகில், மேலமடை, மதுரை - 625 020.

**Email : sivabalajisteel@gmail.com, Web : www.s4ss.in**



நீடித்த உழைப்பால் மக்கள் மனதில் நிலைத்து நிற்கும் மீரா குஞ்ச் தயாரிப்புகள்

**Meerakunj**

RIGID PVC PIPES, FITTINGS & TANKS

AN ISO 9001 : 2008 COMPANY

*Trust us with all your Electrical Plumbing and Agri needs...*



## மீரா குஞ்ச் பாலிடிரேடர்

17-18, காக்கா தோப்புத் தெரு, மேல மாசி வீதி, மதுரை - 625 001.

போன் : 0452-2343372, 4381372, 4373372, செல் : 98421-43372

E-mail : meerakunjpipes@yahoo.in www.meerakunj.com



## VIGNESH GRAPHICS

*All Kinds of Printing Solution*



- Brouchers
- Wedding Cards
- Souvenirs & Directories
- Visiting Cards

**Head Office :** 79-A, South Marret Street, Madurai - 625 001.

**Branch :** No. 33, Manjanakara Street, Madurai - 625 001.

**Branch :** Plot No. 48/5, Chinna Anuppanadi, Industrial Plot Area, Near ABC Badminton Club, Mela Anuppanadi, Housing Board Colony, Madurai - 625 009.

O : 96980 11066 | Ph : 93441 01432 | 98434 14310 | Email : vgmadurai1@gmai.com

- Letter Pads
- Shopping Bags
- Paper Bags
- Menu Cards





உ

விழித்து எழுந்தவுடன் கிடைப்பதில்லை வெற்றி ! விழுந்து எழுந்தவுடன் கிடைப்பதே வெற்றி !!

## ஸ்ரீ விஜயலெட்சுமி ஸ்கிரீன்

### விஜயலெட்சுமி DTP & ஸ்கிரீன்

91506-00904, 99940-18805, 78128-19162

கதிர்வேல் நகர் 1 வது தெரு, 51/51, பாலு கொத்தனார் தெரு, மீனாட்சி நகர், வில்லாபுரம், மதுரை-12.

SINCE-1993 01-07-1993 31 Years 2023 SVLS

வெள்ளி விழா கண்ட நிறுவனம்

அனைத்தும் சிறந்த முறையில் செய்து தரப்படும்

தினசரி & கட்டிங் மாத காலண்டர் | 12 DAYS DELIVERY மல்டிகலர் ஸ்டிக்கர் | தமிழ் டைரி ஆங்கில டைரி | 30 DAYS DELIVERY கோல்டு ஸ்டிக்கர்

20 DAYS DELIVERY ஜூட் பேக் & தாம்பூல பை | பார்கோட் ஸ்டிக்கர் 5 to 10 DAYS DELIVERY | விபூதி கவர் 7 DAYS DELIVERY | சாமி படம் வுட்லேமினேசன் | ஸ்கூல் லேபிள்



நட்பை விட ! நம்பிக்கையை விட !! நாணயமே சிறந்தது !!!

Cell : 98421-18873, 98428-18873

R.R. பாலகுமார்

R.R. குபேந்திரன்

R.R. பிரேம்குமார்

e.mail : svlsmadurai@gmail.com

Date of Posting : 20.04.2026 / BPC MDU
Printed Matter / Book Post
Date of Publication 20th of Every Month

**Kuttuva Silicates (P) Ltd.,**
KSPL,Madurai
5A, (New No.17) New Teppakulam Colony, Near Annai Chandramathi Mahal, Madurai-625 009.
Email: sales@kuttuvasilicates.com, https://www.kuttuvasilicates.com
Phone: Office: +91 452 2312293 / 98409 60846
Manufacturers of
Sodium Silicate Liquid
Sodium Meta Silicate Powder
Geo Polymer Concrete Liquid



**வேல் மருத்துவமனை**
**வேல் சிறப்பு எலும்பியல் மையம்**
Institute for Trauma, Shoulder & Knee, Sports Injury, Arthroscopy & Joint Replacement
VSOC: Institute for Trauma, Shoulder & Knee, Sports Injury, Arthroscopy, Joint Replacement
VALE HOSPITAL
45, குருவிக்காரன் சாலை, அண்ணா பஸ் ஸ்டாண்டு, மதுரை- 625 020. Ph: 0452-4367597
Contact : 97871 91156, 95003 16661, 93442 46436 | vsoc.drkns@gmail.com | www.valeortho.com
24hrs Service
Dr. K.N. சுப்ரமணியன் MBBS, MS, MRCS Ed, M.Ch. Orth, FRCS (Tr & Orth), CCT Orth (GMC-UK)
Chief - Otho Unit 3 / Senior Consultant, Velammal Medical College & Speciality Hospital, Madurai.





சிறப்பம்சங்கள்
- நவீன கருவிகள் பொருத்தப்பட்ட அறுவை சிகிச்சை அரங்கம்
- முழுவதும் குளிரூட்டப்பட்ட மருத்துவமனை
- நவீன நுண்துளை சிகிச்சை கருவிகள்
- மூட்டு மாற்று சிகிச்சைக்கான சிறந்த உள்கட்டமைப்பு
- எலும்புகளுக்கு உண்டான ஸ்டெம் செல் சிகிச்சை
- விளையாட்டு மறுப்பயிற்சி
- மருந்தகம்
- டிஜிட்டல் எக்ஸ்ரே
- இரத்தப் பரிசோதனை
- நவீன பிஸியோ

Experience the Expertise Advice

உங்கள் எலும்பு மற்றும் மூட்டு பிரச்சனைக்கு எளிய தீர்வு மையம்
- முழங்கால் ஜவ்வு பழுதடைதல்
- தீராத தோள் மூட்டு வலி
- தோள் மூட்டு விலகுதல்
- விளையாட்டு காயங்கள்
- மூட்டு தேய்மானம்
- விபத்தினால் உண்டான சிக்கலான மூட்டு பிரச்சனைகள் & இதர எலும்பு & மூட்டு நோய்கள்

- மூட்டு நுண்துளை சிகிச்சை
- விபத்து அறுவை சிகிச்சை
- முழங்கால் & தோள் மூட்டு மாற்று சிகிச்சை
- விளையாட்டு இயல்முறை பயிற்சி

*Right Treatment is Everyone's Right*

नवीन एवं नवीकरणीय ऊर्जा मंत्रालय
MINISTRY OF NEW AND RENEWABLE ENERGY
सत्यमेव जयते
தென் தமிழகத்தின்
**நம்பர் 1**
சோலார் நிறுவனம்



Prakash Green Energy
Providing Perfect Solar Solutions
வீடுகளுக்கு **78000 ரூ** அரசு மானியமாக பெற்றுத் தரப்படும்
Premium Quality
30+ Years Warranty
100 % Guarantee
MSME
TANGEDCO
**அதிக மின் கட்டணம் செலுத்துகிறீர்களா ?**
உங்கள் வீடு, வணிக கட்டிடம் மற்றும் தொழிற்சாலைகளுக்கு அதிக மின் கட்டணம் செலுத்துவதை தவிர்த்திடுவீர்
வங்கி கடன் வசதியும் உண்டு. வட்டி விகிதம் 6.5% முதல்
+91 63749 01500
support@prakashgreenenergy.com
www.prakashgreenenergy.com
HEAD OFFICE:
14R, N.S Konar Street,
Jaihindpuram,Madurai - 625011



*Official Publication:*
**SOURASHTRA CHAMBER OF COMMERCE**
136, East Veli Street, II Floor, Madurai - 625009
Call: 0452 2629955 / 93441 97952
Email: sourashtra.chamber@gmail.com
Web: www.sourashtrachamber.com